# சத்யம் பயோவின்
# சத்யம் வேளாண் மருத்துவமனை




## வளமான விவசாயத்துக்கான
# வழிகாட்டி!






## விவசாயிகளுக்கு வணக்கம்,

“இந்தியாவில் விவசாயத்தை தொழில் ஆக்குவோம்! விவசாயிகளை தொழில்முனைவோராக்குவோம்!!” என்ற கோஷத்தை முன்னெடுத்து செயல்பட்டு வருகிறார், நம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி. அவருடைய வார்த்தையை மெய்ப்பிக்கும் வகையில் கடந்த 20 ஆண்டுகளாக மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயற்கை உரங்கள் தயாரிப்பில் சத்யம் பயோ குழுமம் முன்னோடியாகச் செயல்பட்டுவருகிறது. தேவைக்கு அதிகமாகவோ, விரைவாகவோ பலன்பெற வேண்டியும், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிமருந்துகள் அதிக அளவில் பயன்படுத்தியதால் நமது மண் மற்றும் நீர் வளங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை இயற்கை முறைக்கு மாற்றும் முயற்சியாக 2004-ம் ஆண்டில் சத்யம் பயோ குழுமம், கடல்வழித் தாவரங்களின் மூலப்பொருள்களில் இருந்து இயற்கை உரங்கள் தயாரிக்கும் முயற்சியை முன்னெடுத்து, தயாரித்து விற்பனை செய்துவருகிறது.



சத்யம் இயற்கை உரங்களைப் பயன்படுத்தும்போது, ஏற்கெனவே பாழாகிப்போன மண்கூட மீண்டும் உயிர் பெற்று வளமான விளைச்சலைக் கண்டது என்பது, விவசாயிகளின் அனுபவத்தின் மூலமாக கண்கூடாகத் தெரியவந்தது.

இதன் காரணமாக “மண்வளம் சிறப்பு, அமோகமான விளைச்சல், நல்ல வருமானம்” எனக் கிடைத்த முப்பயன்களால் விவசாயிகளிடம் சத்யம் இயற்கை உரங்களுக்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு எங்கள் தயாரிப்புகளை விரிவுபடுத்தினோம்.

தானியப் பயிர்கள், சிறு தானியப் பயிர்கள், குறுதானியப் பயிர்கள், பயறு வகைப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள், நறுமணப் பயிர்கள், நார்ப் பயிர்கள், சர்க்கரைப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், பழவகைப் பயிர்கள், மலர் வகைப்பயிர்கள், மலைத்தோட்டப்பயிர்கள், பணப் பயிர்கள், கிழங்கு வகைப் பயிர்கள், உரப் பயிர்கள், தீவனப்பயிர்கள், நாற்றுப்பண்ணைகள், வீடு மற்றும் மாடித் தோட்டங்கள் என அனைத்து வகையான விவசாயத்துக்கும் ஏற்றவகையில் எங்கள் தயாரிப்புகளை ஜெல், குருணை, பவுடர், திரவ மற்றும் மாத்திரை வடிவங்களில் உற்பத்தி செய்து வழங்கி வருகிறோம்.



இயற்கை விவசாயத்துக்கு மட்டுமன்றி, ரசாயன உரங்களைப் பயன்படுத்தும் விவசாயத்துக்கும் இது நன்கு ஒத்துழைக்கும். சத்யம் இயற்கை உரங்கள் பயன்படுத்தும்போது, ஏற்கெனவே பயன்படுத்தும் ரசாயன உரத்தின் பாதி அளவே போதுமானது. இதன் மூலம் செலவு பெருமளவு குறைவதோடு, ரசாயன சத்துகளை பயிர்களுக்கு விரைவாக எடுத்துக் கொடுத்து, சிறப்பான விளைச்சல் கிடைக்க வழிவகை செய்கிறது.

ஏறத்தாழ 16 வகையான பயிர் வகைகளிலிருந்து, நூற்றுக்கும் மேற்பட்ட பயிர்களுக்கு, கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற எங்களது நிறுவனத் தயாரிப்புகள், மண்வள மேம்பாட்டுக்கும், தாவரங்களின் வளர்ச்சி, அதிக பூக்கள், காய்கள் போன்றவற்றின் உற்பத்திக்கும் மிகுந்த பலனளிக்கின்றன.

எனவே, விவசாயிகள் அனைவரும் எங்களது இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, நஞ்சில்லா உணவை வாழும், வளரும், வரப்போகும் சந்ததிகளுக்கும் வழங்கி வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற வேண்டுமாய் கேட்டு க் கொள்கிறேன்.

நன்றி!

**சத்யம் வெ.செந்தில்குமார்,**
நிறுவனர் மற்றும் தலைவர்,
சத்யம் தொழில் குழுமம், மதுரை.

# “விவசாயத்தை தொழில் ஆக்குவோம், விவசாயிகளை தொழிலதிபர்களாக்குவோம்”

“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை”

~ குறள்

உலகம் பல்வேறு தொழில்கள் செய்து சுழன்றாலும் விவசாய தொழிலின் பின்தான் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது. உயிர்கள் வாழ அடிப்படையான முதல் தேவை உணவாகும். அதை உற்பத்தி செய்ய விவசாயம் இன்றியமையாதது என விவசாயத்தின் தேவையை வலியுறுத்தி கூறுகிறார் வள்ளுவர்.

மனிதர்கள் முதல் கால்நடைகள் வரை அனைவரையும் நோய்கள் முதலான அனைத்து பாதிப்பிலிருந்தும் காத்து நலமாக்குவதற்கு மருத்துவமும் மருத்துவமனையும் எவ்வளவு முக்கியமோ... அதைப்போல, நம்மை வாழவைக்கும் நிலம் மற்றும் விவசாயப் பயிர்களும் நோய்கள் முதலான பலவித பாதிப்புகளுக்கு ஆளாகின்றன. அவற்றுக்கு ஊட்டமாக இயற்கை மற்றும் ரசாயனமுறை மருந்துகள் உள்ளன.

ஆனால், மருத்துவமனை?

விவசாயிகளின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்ததை நிறைவேற்றியிருக்கிறது மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இயற்கை உரங்கள் தயாரிப்பு நிறுவனமான சத்யம் குழுமம். \ அதன் புதிய பரிணாமமே “சத்யம் அக்ரோ கிளினிக்” - இது வேளாண்மைக்கான சிறப்பு மருத்துவமனை!

இதன்மூலம் பெருமைமிக்க விவசாயத்துறையில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள், பயிர்களின் பாதிப்புகளைக் குறைத்து நல்ல மகசூலைக் கொடுத்து விவசாயிகள் வளம்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு சத்யம் அக்ரோ கிளினிக் செயல்பட்டு வருகிறது.

## நிறுவனத்தின் இலக்குகள்

**5**

**5 மாநிலங்கள்:**
தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா ஆகிய ஐந்து மாநிலங்களில் ‘சத்யம் அக்ரோ கிளினிக் ஸ்டோர்’ நிறுவுதல்!

**5K**

**5,000 சத்யம் வேளாண் தொழில் முனைவோர்கள்:**
5000 சத்யம் அக்ரோ வேளாண் தொழில் முனைவோர்களை உருவாக்குதல் !

**50K**

**50,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு:**
ஐந்து மாநிலங்களில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் 50,000 படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

**50L**

**50,00,000 விவசாயிகளுக்கு சத்யம் உரங்கள்:**
50 லட்சம் விவசாயிகளை சத்யம் இயற்கை உரங்களை பயன்படுத்த வைத்தல்!

**5,000 Cr**

**5,000 கோடி வருவாய்:**
நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஆண்டுக்கு ரூ.5,000 கோடி பங்களிப்பு என மாற்ற வேண்டும்.

“விவசாயத்தை தொழில் ஆக்குவோம், விவசாயிகளை தொழிலதிபர்களாக்குவோம்” என்ற உயரிய நோக்கத்துக்கு ஏற்றவாறு, விவசாயத்துறையில் ஆர்வம் உள்ள படித்த / படிக்காத இளைஞர்கள் மற்றும் விவசாயத்தை நேசிக்கும் விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தில் படித்த இளைஞர்களுக்கு, தாலுகா வாரியாக வேலைவாய்ப்பு மற்றும் சத்யம் அக்ரோ கிளினிக்கினால் Franchise வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**சத்யம் அக்ரோ கிளினிக் - தமிழகம் முழுவதும் வேளாண் சேவைகள் மற்றும் விவசாய ஆலோசனைக்கு அழைக்கவும்: +91 75508 75508 | www.sathyamagroclinic.com**






# சத்யம் அக்ரோ கிளினிக்: வேளாண்மைக்கான சிறப்பு மருத்துவமனை!

சமீப காலமாக இயற்கை விவசாயத்திலும், இயற்கை உரங்களை பயன்படுத்துவதிலும் விவசாயிகள் முழு கவனம் செலுத்திவரும் இவ்வேளையில், அவர்களுக்குத் தேவையான அனைத்தும் ஒரே குடையின் கீழ் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் விவசாய செலவு, வீண் அலைச்சல், சிரமத்தைக் குறைப்பதற்காகவும் உருவாக்கப்பட்டதே சத்யம் அக்ரோ கிளினிக்...

**சத்யம் அக்ரோ கிளினிக் சேவைகளின் சிறப்பம்சங்கள்:**

**விதைகள் முதல் விற்பனை வரை!**

**அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்...**

1. பயிர்களுக்கு ஏற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை நேரடி களஆய்வு.
2. காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை.
3. விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை.
4. விற்பனை விலையிலிருந்து உரங்களுக்கு 50% விலை குறைப்பு.
5. உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர்களுக்கு கூலியில் பங்களிப்பு.
6. விளைபொருள்களின் அறுவடையில் உதவி.
7. விளைபொருள்களை நியாயமான விலையில் கொள்முதல் செய்தல்.

ஒவ்வொரு சத்யம் அக்ரோ கிளினிக்கிலும், பி.எஸ்சி (வேளாண்மை / தோட்டக்கலை) அல்லது டிப்ளோமா (வேளாண்மை / தோட்டக்கலை) படித்து உரிய பயிற்சி பெற்ற பட்டதாரிகள் (அக்ரி டாக்டர்கள்) நியமிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குவார்கள். இவர்களின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள கள அதிகாரிகள் விவசாயிகளின் நிலங்களுக்கே நேரடியாகச் சென்று ஆலோசனைகளை வழங்குவதுடன், விவசாயிகளின் நடவுகாலம் தொடங்கி அறுவடை காலம் வரை தொடர் கண்காணிப்பையும் மேற்கொள்வார்கள். இதன்மூலம் விவசாயிகள் முழுமையான லாபம் பெறுவதற்கு சத்யம் அக்ரோ கிளினிக் உறுதுணையாக இருக்கும். இதேபோல கடற்பாசி தயாரிப்பு மற்றும் சேகரிப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள கடலோரப் பகுதிகளில் வசிக்கின்ற மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க, தமிழ்நாடு அரசுடன் நமது மதுரை சத்யம் பயோ நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு, அதைச் செயல்படுத்தியும் வருகிறது.

மேற்கண்ட சத்யம் அக்ரோ கிளினிக்கின் அனைத்துச் சேவைகளையும் ‘SATHYAM FARMERS CLUB’-ல் இணைவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். சத்யம் பயோ நிறுவனத்தின் தயாரிப்புகளின் தரத்துக்காக விவசாயிகளுடன் இணைந்து, வேளாண்துறை, அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த பிற அமைப்புகளும் வழங்கியுள்ள விருதுகளும் சான்றிதழ்களுமே உத்வேகம் அளிக்கின்றன என்றால் அது மிகையல்ல!



# இயற்கை விவசாயமும்...
# கடற்பாசி உற்பத்தியும்...

### கடற்பாசி என்றால் என்ன?

ஆறுகள் மற்றும் கடல் போன்ற நீர்நிலைகளில் வளரும் தாவரங்களே கடற்பாசிகள் என்று அழைக்கப்படுகின்றன.

நீருக்கடியில், சிவப்பு, பச்சை, பழுப்பு வண்ணங்களில் மிகச்சிறிய அளவிலிருந்து, பெரிய காடுகள் வரை அளவுகளில் வேறுபடுகின்றன. இயற்கை கடற்பாசியை உலர்ந்த (அ) புதிய வடிவத்தில் உயிர்உரங்களின் ஆதாரமாகப் பயன்படுத்தலாம். இவை தாவரங்களிலுள்ள கார்போஹைட்ரேட் லிப்பிடுகள், புரதங்கள், நார்ச்சத்து போன்ற உயிர்வேதியியல் கூறுகளை அதிகரிக்க உதவுகிறது. தாவர ஊட்டச்சத்திற்குத் தேவையான மைக்ரோ மற்றும் மேக்ரோ கூறுகளின் நல்ல ஆதாரமாகவும் கடற்பாசி விளங்குகிறது.

### கடற்பாசி உரம்:

கடற்பாசி உரம் என்பது கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படும் கரிம உரமாகும். இவை, மண்ணில் நுண்ணுயிர் செயல்பாடுகள் மற்றும் சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இதனால், கடற்பாசியானது மண்வளத்தையும், தாவரவளர்ச்சியையும் அதிகரிக்க விவசாயத்தில் பயன்படுத்தப்படுகிறது. கடற்பாசி ஒரு வலுவான மண்கண்டிஷனர் ஆகும். உயிர் நிவர்த்தி மற்றும் உயிரியல் பூச்சிக்கட்டுப்பாடு எனச் செயல்படுகிறது.

ஒவ்வொரு கடற்பாசி தாவரமும் மண் மற்றும் பயிர் ஆரோக்கியத்திற்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. அவையன, அஜியோடிக் அழுத்தங்களுக்கு அதிக சகிப்புத்தன்மை, மேம்பட்டமண்ணின் அமைப்பு, தண்ணீரைத் தக்கவைத்தல் மற்றும் நோய்களைக் குறைப்பது போன்றவை அடங்கும்.

### கடற்பாசிகளின் பயன்பாடு:

மருந்துகள், உணவுகள், அழகுசாதனப் பொருள்கள் மற்றும் இயற்கை உரங்கள் தயாரிப்பு

### விவசாய பயன்பாடு:

1. உயிர் உரங்கள்
2. விலங்கு உணவுகள்
3. மண்வள மேம்படுத்துதல்

### இந்தியாவிலுள்ள கடற்பாசியின் வகைகள் / இனங்கள்:

1. சிவப்பு நிறப்பாசி ( ரோடோ ஃபிட்டா ) - 844 இனங்கள்
2. பழுப்பு நிறப்பாசி ( ஃபியோ ஃபிட்டா ) - 194 இனங்கள்
3. பச்சை நிறப்பாசி (குளோரோ ஃபிட்டா) - 216 இனங்கள்

### இந்தியாவில் உரமாகப் பயன்படுத்தப்படும் 10 வகையான கடற்பாசிகள்:

1. சர்காஸம் வைட்டி
2. சர்காஸம் ட்ரைக்கோபில்லம்
3. யுஃபேசியாட்டா
4. எஸ்ஃப்ளாஜியோபில்லம்
5. எஸ்ஃப்ளாஜியோ ஸ்வார்ட்ஸி
6. எஸ்ஃப்ளாஜியோ பாலிசிஸ்டம்
7. கப்பாபிக்ஸ்சாப்
8. ஃபுகஸ்வெசிகிலேட்
9. அஸ்கோபில்லம் நோட்டோசம்
10. பதினாடெட்ராஜ்டோ மேட்டிகா

### கடற்பாசியிலுள்ள விவசாயத்திற்கு பயன்படும் சத்துகள்:

1. தழை, மணி, சாம்பல் சத்துகள்
2. கால்சியம், மெக்னீசியம், சல்பர்
3. நுண்ணூட்டச்சத்துகள்
4. பல்விக் அமிலங்கள்
5. ஹியூமிக் அமிலங்கள்
6. அமினோ அமிலங்கள்
7. ஆர்கானிக் கார்பன்
8. ஆர்கானிக் மினரல்ஸ்





9. வைட்டமின்கள்
10. புரோட்டீன்
11. ஆக்சின்
12. ஜிப்ரலின்
13. அல்ஜீனிக்
14. பாலிசாக்கரைடுகள்
15. சைட்டோகினின்

### விவசாயத்தில் கடற்பாசிகளின் பயன்கள்:

1. மண்ணின் தன்மை நிலையை மேம்படுத்துவதற்கும், தாவரத்திற்கு உயிர் வினையூக்கியாகவும் செயல்படுகிறது. ஹியூமிக்அமிலங்கள், தாவரங்கள் மற்றும் மண்ணுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள், வைட்டமின்களை வழங்குகின்றன. மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீர்தக்க வைப்பு செயல்பாடுகளை மேம்படுத்துகிறது.
2. மண்ணின் கார, அமிலத்தன்மையினை ஒழுங்குபடுத்துகிறது. மேம்பட்ட மண்ணுக்கு கரிமகார்பன் ஆதாரமாக உள்ளது.
3. ஊட்டச்சத்துகூறுகளான, N, P, K, Fe, Zn போன்றவை தாவரங்களுக்கு கிடைக்கக்கூடிய வடிவங்களாக மாற்றுவதை ஊக்குவிக்கிறது.
4. Ca, Fe, Mg பாஸ்பரஸின் எதிர்வினைகளைக் குறைத்து தாவரங்களுக்கு கிடைக்கக்கூடிய மற்றும் நன்மைபயக்கும் வடிவமாக செய்கிறது.
5. மண்ணில் இருந்து செடிகளுக்கு நச்சுப்பொருள்கள் கிடைப்பதைக் குறைக்கிறது. உயிரியல் ரீதியாக தாவரத்தையும், நுண்ணுயிரிகளின் செயல்பாடுகளையும் தூண்டுகின்றன.
6. நோய்கள் மற்றும் பூச்சிகளுக்கு எதிராக தாவரத்தின் இயற்கை எதிர்ப்பை அதிகரிக்கிறது. வேர்வளர்ச்சியைத் தூண்டி, ஊட்டச்சத்துக்களை நன்கு எடுத்துக்கொடுக்க உதவுகிறது. வேர்சுவாசம் மற்றும் வேர்உருவாக்கம் அதிகரிக்கிறது.
7. தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு உதவுகிறது,
8. பழங்களில் செல்சுவர்களை தடிமனாக்குகிறது. ஹியூமிக் அமிலங்கள் மண்ணில் அதிக உப்பைக் குறைக்கிறது.
9. மண்ணின் அடியில் உள்ள தாவரங்களுக்கு ஈரப்பதம் மூலம் வேர்களின் உறிஞ்சுதலுடன், காற்றோட்டத்தினை அதிகரிக்கிறது.

### மண்ணின் மேல் உள்ள தாவரங்களுக்கு:

1. ஊட்டச்சத்து பயன்பாட்டு செயல்திறனை மேம்படுத்துகிறது.
2. பூ பூக்கும்போது மகரந்தசேர்க்கை மற்றும் முளைக்கும்போது பழங்கள் அமைவதை அதிகரிக்கும்.
3. ஸ்டோமட்டோ மற்றும் இலைத்திசு வழியாக ஊட்டச்சத்து உறிஞ்சுதலை மேம்படுத்துகிறது.
4. ஆக்ஸிஜன் கிடைப்பதை மேம்படுத்துகிறது.
5. மண்ணில் வேர்மண்டலத்திலிருந்து அதிகளவு உப்புகளை வெளியேற்றவும் உதவுகிறது.




# சத்யம் பயோ தயாரிப்புகள் மற்றும் அதன் **சிறப்புகள் !**

**க**டற்பாசி மற்றும் இயற்கை கனிம வளத்திலிருந்து சத்யம் பயோ நிறுவனமானது, அனைத்து வகையான பயிர்களுக்கும் தேவையான சத்துக்களை, செடிகள் ஏற்றுக்கொள்ளும் வடிவத்தில் ஜெல், குருணை, திரவம், பவுடர் மற்றும் மாத்திரை வடிவில் 7 உயிர் உரங்களுடன், 29 வகையான தயாரிப்புகளை வழங்குகிறது.

## ஜெல்வடிவ உரங்கள்:

**உட்பொருள்கள்:** கடற்பாசி தாவரச்சத்துகள், தழை, மணி, சாம்பல் சத்துகள், இரண்டாம் நிலைச்சத்துகள், நுண்ணூட்டச்சத்துகள், அமினோ அமிலங்கள், புரதச்சத்துகள், தாதுப்பொருட்கள் மற்றும் ஆர்கானிக் கார்பன் சத்துகளை உள்ளடக்கியது.

**பலன்கள்:** இது மண்ணின் நச்சுத்தன்மையை நீக்கி, கார அமிலத்தன்மையை நிலைப்படுத்தி, மண்ணை பொலபொலப்பாக்குகிறது. வேர் வளர்ச்சியைத்தூண்டி அனைத்துச் சத்துகளும் சரிசமமாக பயிர்களுக்கு கிடைக்கச்செய்கிறது. ஒளிச்சேர்க்கையைத்தூண்டி பச்சையம் தயாரித்து, பயிர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி அதிக மகசூல் கிடைக்கச்செய்கிறது.

**பயன்பெறும் பயிர்வகைகள்:**

அனைத்துப் பயிர்களுக்கும் பலனளிக்கும்.






## குருணைவடிவ உரங்கள்:

**உட்பொருள்கள்:** கடற்பாசியின் திரவச்சாறு, பேரூட்டச்சத்துகள், நுண்ணூட்டச்சத்துகள், அமினோ அமிலங்கள், தாதுப்பொருள்கள், என்சைம்கள், ஆர்கானிக் கார்பன், கரிம கனிமச்சத்துகள்.

**பலன்கள்:** சல்லி வேர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து, பயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது. கலப்பு உரமாக பயன்படுத்தும்போது, உற்பத்திப்பொருள்களின் பருமன், தரம், நிறம், எடை மற்றும் சுவையை அதிகப்படுத்துகிறது. விளை பொருள்களின் சேமிப்புக்காலத்தை அதிகமாக்குகிறது. வறட்சியைத்தாங்கும் தன்மை, பூச்சிநோய்த் தாக்குதலுக்கு எதிர்ப்புச்சக்தி அளிக்கிறது.

**பயன்பெறும் பயிர்வகைகள்:** அனைத்துப் பயிர்களுக்கும் பலனளிக்கும்.




## பவுடர் வடிவ உரங்கள்:

**உட்பொருள்கள்:** தாவர வளர்ச்சி ஊக்கிகள், நுண்ணூட்டச்சத்துகள், தாவரச்சாறுகள், பயோ பொட்டாஷ், சிலிக்கான், ஆர்கானிக் கார்பன், அமினோ அமிலங்கள், பயிர்வளர்ச்சியூக்கிகள்.

**பலன்கள்:** பவுடர் வடிவாக உள்ளதால், நேரடியாக அல்லது மற்ற பொருள்களுடன் கலந்து பயன்படுத்துவது எளிது. மண்ணில் ரசாயன உரங்களின் மூலம் ஏற்பட்ட பாதிப்புகளை (நச்சுத்தன்மையை) சரிசெய்கிறது. கார, அமிலத்தன்மையை நிலைப்படுத்தி மண்ணை வளப்படுத்துகிறது. மகரந்தச்சேர்க்கை செயல்பாடுகளை அதிகரிக்கிறது. தண்டினைச்சுற்றி கவசம் போலச் செயல்பட்டு பூஞ்சை நோய்கள் தாக்காமல் பாதுகாக்கும்.

**பயன்பெறும் பயிர்வகைகள்:** அனைத்துப் பயிர்களுக்கும் பலனளிக்கும்.




## திரவ வடிவ உரங்கள்:

**உட்பொருள்கள்:** கடல்பாசிகளின் சாறு, தழை, மணி, சாம்பல் சத்துக்கள், கரிம கார்பன், கனிம சத்துக்கள், பயோ பொட்டாஷ், அமினோ அமிலங்கள், புரதம் மற்றும் நுண்ணூட்டச்சத்துகள்.

**பலன்கள்:** வேர்களின் உறிஞ்சும் தன்மை மற்றும் நுண்ணுயிர்கள் பெருக்கம் அதிகரிக்கும். மண்ணில் கலந்து, சிதைந்து நீர்ப்பிடிப்பு, காற்றுப்புகும் தன்மை ஏற்படுத்தி சத்துகளை முழுமையாக வேர்களுக்கு எடுத்துக்கொடுக்கும், அதிக பூக்கள் உற்பத்தி, பூத்த பூக்கள் உதிராமல், மொட்டுக்களை அதிகரிக்கச்செய்கிறது. காய்கள், பழங்களின் நிறம், தரம், சுவை மற்றும் அதிக எடை கிடைக்க பெரிதும் உதவுகிறது. நீரின் தேவையைக்குறைப்பதுடன், பயிர்களை வறட்சியிலிருந்தும் பாதுகாக்கிறது.

**பயன்பெறும் பயிர்வகைகள்:** அனைத்துப் பயிர்களுக்கும் பலனளிக்கும்.



## உயிர் உரங்கள்:

**உட்பொருள்கள்:** பாஸ்பேட் கரைசல், நுண்ணூட்டச்சத்துகள், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, கரைக்கும் பொட்டாஷ் மற்றும் துத்தநாகம்.

**பலன்கள்:** மண்ணின் மூலம் பரவும் வேரழுகல், வாடல் நோய், நாற்றழுகல் நோய், வீக்க வேர் நோய் இலைவழியாக பரவும் பூஞ்சாண நோய்களான குலைநோய், இலையுறை கருகல் நோய், இலைப்புள்ளி நோய் மற்றும் ஆந்த்ராக்னோஸ் பாதிப்புகளை குறைக்கும். மண்ணில் கரையாத நிலையிலுள்ள மணி மற்றும் சாம்பல் சத்துகளை கரைத்து பயிர்களுக்குக் கிடைக்கச் செய்யும். வளிமண்டலத்திலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிர்களுக்கு அளிக்கிறது.

**பயன்பெறும் பயிர்வகைகள்:** அனைத்துப் பயிர்களுக்கும் பலனளிக்கும்.



# விவசாயத்தில் சத்யம் பயோ தயாரிப்புகளின் பங்களிப்பு...

சத்யம் பயோவில் கடற்பாசியைப் பயன்படுத்தி அதிலுள்ள சத்துகளைக் கொண்டு இயற்கை உரங்கள் தயாரிக்கப்படுகிறது. இது ஜெல், குருணை, பவுடர், திரவ மற்றும் மாத்திரை வடிவிலான முறையில் உரங்களாக தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இது பூச்சிவிரட்டிகளாக இயற்கை முறை விவசாயத்திற்கு மட்டுமன்றி ரசாயனம் பயன்படுத்தி விளைவிக்கக்கூடிய விவசாயத்திற்கும் பெருமளவு உதவுவதோடு, செலவினையும் பாதியாகக் குறைக்கிறது.

நம்நாட்டில் தானியப்பயிர்கள், குறுந்தானியப்பயிர்கள், சிறுதானியப்பயிர்கள், பயறுவகைப்பயிர்கள், எண்ணெய் வித்துப்பயிர்கள், சர்க்கரைப்பயிர்கள், காய்கறிப்பயிர்கள், மலர்ப்பயிர்கள், பழப்பயிர்கள், மலைத்தோட்டப்பயிர்கள், நறுமணப்பயிர்கள், கிழங்கு வகைப்பயிர்கள், நார்ப்பயிர்கள், இலாகிரிப்பயிர்கள், உரப்பயிர்கள், தீவனப்பயிர்கள் என 16 பயிர்வகைகளிலிருந்து, ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

மேற்கண்ட பயிர்கள் விளைவிக்கும் நிலங்களின் மண்வளத்தை மேம்படுத்தவும், பயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கவும், அதிக பூக்கள் பூக்கவும், காய்கள் காய்க்கவும் மகசூலை பெருக்கவும் நமது சத்யம் பயோ மூலமாக உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரங்கள் சுமார் 15 வகையான சத்துக்களை அளித்து உதவுகிறது. அவை நிலங்களை வளப்படுத்துவதோடு, நோய்த் தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றி, பூச்சி விரட்டி மற்றும் பயிர் ஊக்கிகளாகவும் செயல்படுகிறது.

முக்கிய பயிர் வகைகள் சிலவற்றை நமது சத்யம் பயோ மூலமாக உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரங்களை பயன்படுத்தி, எவ்வாறு சிறப்பாக விளைவிப்பது என்பதை காண்போம்...



## வாழை:

வாழை பயிரிட, டிசம்பர், ஜனவரி மற்றும் ஜூன், ஜூலை மாதங்கள் சிறந்தவை. வண்டல் மண், களி கலந்த வண்டல் மண்ணில் நன்றாக வளரும் தன்மை கொண்டது.

நட்ட 30 வது நாளில் முதல் முறையாக களை எடுக்க வேண்டும். கைக்களை சிறப்பு. சத்யம் இயற்கை உரங்களை பயன்படுத்தி...

1. மண்ணை வளப்படுத்த மண்ணை பொல பொலபாக்கி காற்றோட்டம் அதிகரித்து வாழைக்கன்றுகள் செழித்து வளர பனானா ஸ்பெஷல் ஜெல் 10 கிலோ, வேம் 1 லிட்டர், எர்த் பவர் அல்லது சாயில்லிட்டோ பி3 - 2 கிலோ, பயோ என்.பி.கே 1 லிட்டர், தயா நியூட்ரி ப்ரோ 400 மி.லி. இவை அனைத்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒவ்வொரு வாழைக்கன்றின் தூரிலும் 1 முதல் 2 லிட்டர் வரை ஊற்றிவிட வேண்டும்.

2. பயிர்கள் செழித்து வளர இலைவழித் தெளிப்பானாக சம்பூர்ணா-ப்ரோ 2.5 மிலி/லிட்டர் என்ற அளவில் கலந்து 3 மாதங்களுக்கு தொடர்ச்சியாக 15 நாள்கள் இடைவெளியில் தெளிப்பதால் இலைகள் பச்சையம் தயாரிப்பதற்கும் நன்கு செழித்து வளர்வதற்கும் உதவுகிறது.

3. பூச்சி தாக்காமல் இருக்க டிரிபிள் ஆக்சன் 2.5 மி.லி/லிட்டர் என்ற அளவிலும், நோய்கள் வராமல் பாதுகாக்க ராட் கில்லர் 2.5 மி.லி./லிட்டர் அல்லது டார்க்கட் 2.5 கிராம்/லிட்டர் என்ற அளவிலும் 15 நாள்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

மூன்றாவது மாதத்தில் மேட்டுப்பாத்தி அமைத்த பிறகு ஏற்கெனவே அளித்த இயற்கை உரங்களை மீண்டும் அளிப்பதோடு தொடர்ச்சியாக சம்பூர்ணா-ப்ரோ 2.5 மி.லி./ 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் மூன்று மாதங்கள் வரை அளிக்க வேண்டும். குழை தள்ளும் நிலையில் காய்களின் தரம் அதிகரிக்கவும் காய்களின் அளவு பெருக்கவும் சுவை கூடவும் கேலியம் 1 கிராம்/ 1 லிட்டர் தண்ணீர் அல்லது அட்சயா ப்ரோ 2.5 மிலி/ 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை காய்கள் மீது தெளிக்க வேண்டும். பத்தாவது மாதத்திலிருந்து தரமான வாழைத்தார்களை அறுவடை செய்யலாம்.



## தென்னை மற்றும் பாக்கு:

மழை நீரை பயன்படுத்தும் பகுதிகளான கால்வாய்ப் பாசனப்பகுதிகள் எனில் ஜூன், ஜூலை மற்றும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் பாக்கை பயிரிடலாம். அதுமட்டுமல்லாது கிணறு அல்லது போர்வெல் மூலமாக சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திருந்தால் ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம்.

தென்னை நல்ல வடிகால் வசதி கொண்ட வண்டல் மண், கடற்கரை மண் பகுதி, மணற்பாங்கான மண்ணில் பொன்னாய் காய்த்துத்தள்ளும். பாக்கு, அமிலத்தன்மை உடைய சிவப்பு வண்டல் மண்ணில் நன்றாக விளையும்.



உரமிடுவதற்கு முன்பாக களைகள் எடுத்து மரத்தின் தூரில் இருந்து மூன்றடி தள்ளி வட்டப்பாத்தி அமைத்து, அதில் தனித்துவமாக தென்னை, பாக்கிற்கென்றே தயாரிக்கப்பட்ட கோல்டு ஜெல் 10 கிலோ, எர்த்பவர் அல்லது சாயில்லிட்டோ பி3 - 2 கிலோ, பயோ என்.பி.கே 1 லிட்டர், தயா நியூட்ரி ப்ரோ 400 மி.லி. இவை அனைத்தையும் 150 - 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தூரில் 1 முதல் 2 லிட்டர் வரை ஊற்றிவிட வேண்டும்.

தென்னை, பாக்கு ஸ்பெஷல் கோல்டு ஜெல்லானது மண்ணை பொலப்பொலப்பாக்கி நீர்ப்பிடிப்பு மற்றும் காற்றுப்புகும் தன்மையை ஏற்படுத்தி வேர்கள் நன்கு பரந்து வளர்வதற்கும் மண்ணிலுள்ள நச்சுத்தன்மையை நீக்கி கார, அமிலத்தன்மையினை நிலைப்படுத்தவும் உதவுகிறது. எர்த்பவர் அல்லது சாயில்லிட்டோ பி3 மருந்தானது மண் இறுக்கத்தைத் தளர்த்தி வேர் வளர்ச்சியைத் தூண்டச் செய்கிறது. வேம், மண்ணில் நுண்ணுயிரிகளை அதிகரிக்கச் செய்வதோடு பயிர்களுக்குக் கிடைக்காத நிலையிலுள்ள மணி மற்றும் கந்தகச் சத்துகளை கிடைக்க செய்கிறது. பயோ என்.பி.கே, ஆகாயத்திலுள்ள தழைச்சத்தை கிரகித்துக் கொடுப்பதோடு கரையாத நிலையிலுள்ள மணி மற்றும் சாம்பல் சத்துகளை கரைத்து கிடைக்க செய்கிறது. இதனால் மண்ணின் ஈரத்தன்மை அதிகரிப்பதோடு உரங்களில் உள்ள சத்துக்கள் வீணாகாமல் வேர்களை எளிதாக அடைந்து முழுபலன்களும் மரத்திற்கு கிடைக்கிறது. இதன் காரணமாக மரங்களில் மட்டைகளின் எண்ணிக்கைகள் மற்றும் ஓலைகளின் நீளம் அதிகரிக்கும்.

மேற்கண்ட உரங்களை வருடத்திற்கு இரண்டு (6 மாதத்திற்கு ஒரு முறை) அல்லது மூன்று முறை (4 மாதத்திற்கு ஒரு முறை) தேவைக்கேற்ப பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சல் பெறலாம்!

பாளைகள் மற்றும் குரும்பைகள் நன்கு உற்பத்தியாவதற்கும் உதிராமல் காய்கள் வெடிக்காமல் இருப்பதற்கும் நுண்ணூட்டச்சத்துகள் அடங்கிய தயா நியூட்ரி ப்ரோ 400 மிலி, காய்கள் பெருக்கத்துக்கு அட்சயா ப்ரோ 400 மிலி என்ற அளவில் நன்றாக கலந்து அக்கரைசலை மரத்துக்கு ஒரு லிட்டர் வீதம் வட்டப்பாத்தி முறையில் விட வேண்டும். அதோடு தயா நியூட்ரி நுண்ணூட்டச்சத்து டானிக்கை ஒரு மரத்திற்கு 25 மிலி / 100 மிலி தண்ணீரில் கலந்து வேர்முனையில் படுமாறு அளிக்க வேண்டும். இதனால் காய்கள் பெருக்கம் அதிகரிக்கும்.

பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களிலிருந்து வருமுன் பாதுகாக்க ட்ரிபிள் ஆக்சன், இனக்கவர்ச்சிப்பொறி, மஞ்சள் ஒட்டும் அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும். கூடுதலாக ராட்கில்லர், டார்க்கட் போன்ற இயற்கை மூலிகைப்பூச்சி விரட்டிகளையும் பயன்படுத்தலாம்.

தென்னை மற்றும் பாக்கு விளைவிக்கும்போது ஊடுபயிராக வாழை, மஞ்சள், இஞ்சி, மிளகு, பப்பாளி, கோகோ, சோளம், தீவனப்பயிர்கள் பயிரிட்டு உபரிவருமானம் பெறலாம்.

## நெல்:

அடியுரமாக குருணை வடிவிலான சாலிகோ ஜி - 40 கிலோ, எர்த் பவர் (அ) சாயில் லிட்டோ பி3 - 2 கிலோ இத்துடன் ஏற்கெனவே பயன்படுத்தும் ரசாயன உரங்களின் அளவில் பாதி பயன்படுத்தினாலே போதுமானது. விதைகளை / நாற்றுகளை சூடோமோனாஸ் கரைசலில் நனைத்து நடவேண்டும்.

நெல் விவசாயத்தில் தூர் பருவம், பூக்கும் பருவம், பொதிப்பருவங்களில் ஏற்படக்கூடிய நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையினை சரிசெய்ய தயா நியூட்ரி ப்ரோ 400 மிலி பயன்படுத்த வேண்டும். முதல் களை எடுத்த பிறகு எப்போதும்



அளிக்கக்கூடிய ரசாயன உரங்களின் பாதி அளவோடு கூடுதலாக குருணை வடிவிலான அஸ்கோகிங் 10 கிலோ, சாயில் லிட்டோ பி3 - 2 கிலோ கலந்து பயன்படுத்த வேண்டும்.

பூச்சி/ நோய்த்தாக்குதல் வருமுன் பாதுகாப்பு: 25 முதல் 30வது நாள்களில் பூச்சிகளினால் ஏற்படும் தாக்குதல்களைத் தடுக்க, வருமுன் பாதுகாப்பு முறையில் பூச்சி விரட்டியாக டிரிபிள் ஆக்சன் 2.5 மிலி / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தொடர்ச்சியாக 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும் மற்றும் நோய் தாக்குதலிலிருந்து பாதுகாக்க ராட்கில்லர் 2.5 மிலி / 1 லிட்டர் தண்ணீர் அல்லது டார்க்கட் 2.5 கிராம் / 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் பயன்படுத்த வேண்டும்.

பூக்கள் பூக்கும் சமயத்தில் நன்கு பூக்கவும் பூக்கள் உதிராமல் பால்பிடிக்கவும் பதர்கள் வராமல் இருப்பதற்கும் சம்பூர்ணா ப்ரோ - 2.5 மிலி / லிட்டர் தண்ணீர், அட்சயா 2.5 மிலி / லிட்டர் தண்ணீர் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் தெளித்து வர வேண்டும்.



## முருங்கை:

முருங்கை எல்லா வகையான மண்ணிலும் வளரும் தன்மை கொண்டது. இருந்தாலும் மணல் கலந்த செம்மண் பூமி மற்றும் கரிசல் மண் பூமி ஆகியவற்றில் கூடுதல் மகசூல் கிடைக்கும். ஜூன்-ஜூலை, நவம்பர்-டிசம்பர் மாதங்களில் நடவு செய்யலாம்.

ரசாயன உரங்களை பயன்படுத்தும்போது ஆரம்பத்தில் நல்ல மகசூல் கிடைத்தாலும் நாளாக நாளாக அதன் காய்ப்பு குறையத்தொடங்கி மண் இறுக்கமாகிறது. ஆனால் இயற்கை முறையில் விளைவிக்க ஒரு காய்ப்பு முடிந்தவுடன் அடியுரமாக கோல்டு ஜெல், எர்த் பவர் தேவையான அளவு அளிக்க வேண்டும். அதனால் பூச்சித் தாக்குதலின்றி செடிகள் பசுமையாக வளரும். பூக்கள் பூக்கும் சமயத்தில் சம்பூர்ணாவையும், காய்கள் காய்க்கும் சமயத்தில் அக்சயாவையும் இலை வழி தெளிப்பானாக கொடுப்பதால் நோய்த்தாக்குதல்கள் வெகுவாக குறைந்து பூக்கள் அதிக அளவில் பூக்கின்றன. பூக்கள் உதிர்வதும் பெருமளவு கட்டுப்படும். சத்யம் பயோவின் இயற்கை உரங்கள் பயன்படுத்தும் போது சந்தையில் காய்களுக்கு வரவேற்பும் நல்ல விலையும் கிடைக்க வாய்ப்புள்ளது.

## மஞ்சள், வெங்காயம் மற்றும் கிழங்குவகைப்பயிர்கள்:

நடவுக்குரிய காலம் மே, ஜூன், ஜூலை மாதங்கள். ஆரம்பத்தில் உழவோடை சமயத்தில் தொழு உரமாக சாயல் என்ரிச்சர் பயன்படுத்திய பிறகு மூன்று அடி பார் அமைத்து விதைக்க வேண்டும். 30 நாள்களுக்கு பிறகு சாயல்கோல்டு 20லிட்டரை ஒரு கிலோ எர்த் பவருடன் சேர்த்து 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து பேரல் மூலமாக இடவேண்டும். 70 நாள்கள் கழிந்த பின்னர் மஞ்சளுக்கென்றே தயாரிக்கப்பட்ட கோல்டு ஜெல் மஞ்சள், வெங்காயம், மரவள்ளி ஸ்பெஷல் அல்லது கோல்டு ஜெல் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ மற்றும் ஒரு கிலோ எர்த் பவர் சேர்த்து அடி உரமாக இட வேண்டும்.

110வது நாளில் நுண்ணூட்டச்சத்துள்ள அஸ்கோகிங் ஜி குருணை உரம் 30கிலோ மற்றும் இரண்டாம் நிலை ஊட்டச்சத்துள்ள அமோகா குருணை உரம் கலந்து செடி தோறும் அடி உரமாக இடவேண்டும். 170 முதல் 180 நாட்களுக்குள் கோல்டு ஜெல் மஞ்சள், வெங்காயம், மரவள்ளி ஸ்பெஷல் 10 கிலோ, தயா நியூட்ரி 5லி மற்றும் சாயில் கோல்டு கலந்து பயன்படுத்த வேண்டும். பிறகு இரண்டு மாதங்களுக்கு எவ்விதமான உரமோ ஊக்க மருந்துகளோ தேவைப்படாது. ஒன்பதாவது மாதத்தில் நன்றாக வளர்ந்த செடிகளில் தாள் அறுப்பிற்குப் பிறகு பத்தாவது மாதத்தில் அறுவடை செய்ய வேண்டும்.



## மல்லிகைப்பூ:

நடவு செய்த 15 நாள்களுக்குப் பிறகு சிறு புழுக்கள், பூச்சிகளை வரும்முன் கட்டுப்படுத்த டிரிபிள் ஆக்சன் 2.5 மி.லியை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மூன்று மாதங்களுக்குப் பிறகு ஏக்கருக்கு சாயில் கோல்டு 10 லிட்டர் பிளாக் கார்பன் அல்லது எர்த்பவர் 1 கிலோ அளிப்பதன் மூலம் மண் பொல பொலவென ஆவதோடு வேர் பிரச்னைகளை சரிசெய்யும் சல்லி வேர் வளர்ச்சி அதிகரிக்கும். நாம் பயன்படுத்தியுள்ள ரசாயன உரங்களையும் விரைவாக வேர்களுக்கு எடுத்துக் கொடுக்கும்.

செடி வளர்ந்து பூக்கள் அதிகமாக கிடைக்க சம்பூர்ணா 10லிட்டர் தண்ணீருக்கு 25மிலி என்ற அளவில் 15 நாள்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். அமோகா 10 கிலோ மற்றும் சாயில்லிட்டோ 500 கிராம் கலந்து தூரில் அளிக்க வேண்டும். புளியம்பூ கலரில் காணப்படும் பூக்களைத் தவிர்க்க டிரிபிள் ஆக்சன் 25 மிலியினை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும்.

பூச்சி தாக்குதலால் இலைகள் சுருண்டு பூக்கள் உதிர்வதைத் தடுக்க சம்பூர்ணா 25 மிலி/ 10 லிட்டர், பூக்களின் காம்பு பெரிதாக வளர வெண்மையாக அளவு பெரிதாக எடை கூடுதலாக தரத்துடன் கிடைக்க அட்சயா 25 மிலி/ 10 லிட்டர் அல்லது ஜீபூம்பா 10 கிராம்/ 10 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து பத்து முதல் பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை அளித்துவர வேண்டும். வேரழுகல் மற்றும் மஞ்சள் செடியினைக் கட்டுப்படுத்த மழைக்காலத்தில் வேருக்கடியில் சூடோமோனாஸ் 1 லிட்டர்/ ஏக்கர், தயாநியூட்ரி 500 மிலி 200 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிக்கு 1 லிட்டர் வீதம் ஊற்ற வேண்டும்.



## செவ்வந்திப்பூ:

நீர் பாய்ச்சி நிலம் ஈரமான பின்னர் நாற்றுகளின் வேர்ப்பகுதியில் சூடோமோனாஸில் நன்கு நனைத்து அதன் பின்னரே நட வேண்டும். இதனால் வேரழுகல் நோய் கட்டுப்படும். பத்தாவது நாளில் தோன்றும் சிறு புழுக்கள் பூச்சிகளை வரும்முன் கட்டுப்படுத்த டிரிபிள் ஆக்சன் 2.5 மி.லியை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பூ பூக்கத் தொடங்குவதற்கு முன்பாக பூக்கத்தூண்டுவதற்கும் பூக்கள் எண்ணிக்கை அதிகரிக்கவும் பூக்கள் அளவு பெரிதாக கிடைக்கவும் சம்பூர்ணா 2.5 மி.லி 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதனால் நல்ல எடை, வண்ணத்துடன் பூக்கள் கிடைக்கும். பறிப்பு காலம் முடியும் வரை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை டிரிபிள் ஆக்சன் மற்றும் சம்பூர்ணாவினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு தலா 2.5 மி.லி கலந்து தொடர்ந்து அளித்துவர வேண்டும்.

## நெல்லி:

கன்றுகளைச் சுற்றியுள்ள களைகளை அவ்வப்போது அகற்றி பராமரிப்பு செய்ய வேண்டும். நட்ட ஆறு மாதங்கள் கழித்து அடியுரமாக கோல்டு ஜெல், வேம், எர்த்பவர், தயா நியூட்ரி கலந்து ஒரு மரத்திற்கு 1 லிட்டர் அளவில் தூரில் ஊற்ற வேண்டும். வருடத்திற்கு இரண்டிலிருந்து, நான்கு முறை மேற்கண்ட உரங்களை தொடர்ச்சியாக அளித்துவர வேண்டும். தொழு உரங்களை இரண்டாகப் பிரித்து மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் இடவேண்டும். பூ பூக்கும் தருணங்களில் சம்பூர்ணா 2.5 மிலி/லிட்டர் அளவில் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியிலும், பிஞ்சுகள் உருவாகும் தருணங்களில் அட்சயா 2.5 மிலி/லிட்டர் அல்லது ஜீபூம்பா 1கி/1லிட்டர் அளவிலும், காய்கள் திரட்சி மற்றும் பளபளப்பாக கிடைக்க ரெட்கிங் (பயோ பொட்டாஷ்) 10லி/ஏக்கர் அளிக்க வேண்டும்.

பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் வருமுன் பாதுகாக்க, பூச்சி விரட்டியாக டிரிபிள் ஆக்சன் 2.5 மிலி/ ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் அறுவடை வரை 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறை தொடர்ச்சியாகத் தெளிக்க வேண்டும்.



## நிறுவனம் மற்றும் நிறுவனத்தலைவர் பெற்றுள்ள விருதுகள்:




தமிழக முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களிடமிருந்து கடற்பாசி தொழில்நுட்பத்தின் சிறந்த தொழில் முனைவோருக்கான விருது



புதுமையான கண்டுபிடிப்புக்கான கவின்கேர் நிறுவனத்தின் சின்னிகிருஷ்ணன் இன்னோவேஷன் விருது



இளம் தொழிலதிபர் கூட்டமைப்பின் யெஸ் பெஸ்ட் இன்னோவேஷன் விருது



தமிழக நிதி அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு. மூர்த்தி அவர்களுடன்



விஷ்வேஸ்வரய்யா விருது ஆச்சி மசாலா நிறுவனர் திரு.ஏ.டி.பத்மசிங் ஐசக்கிடமிருந்து



மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஜகத் பிரகாஷ் நட்டாவுடன்



மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு நிர்மலா சீதாராமனுடன்



தமிழக வேளாண்மை - உழவர்நலத்துறை அமைச்சர், மாண்புமிகு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்துடன்

# வீடு மற்றும் மாடித்தோட்டங்களுக்கான எளிதாக பயன்படுத்தக்கூடிய இயற்கை உரங்கள்

**சத்யம் பயோவின் வீடு மற்றும் மாடித்தோட்டத்தின் சிறப்புகள்:**

சத்யம் பயோ நிறுவனமானது, வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம், ஹைட்ரோ போனிக்ஸ், அக்வாபோனிக்ஸ், பசுமைக்குடில் போன்ற விவசாயத்தில் அனைத்து வகையான பயிர்களுக்கும் தேவையான சத்துக்களை, கடற்பாசி மற்றும் இயற்கை கனிம வளத்திலிருந்து செடிகள் ஏற்றுக்கொள்ளும் வடிவத்தில் ஜெல், குருணை, திரவம், பவுடர் மற்றும் மாத்திரை வடிவில் எளிதாக பயன்படுத்துமாறு உற்பத்தி செய்கிறது.




### ALGAE F, ALGAE Y மற்றும் TRIPLE ACTION PRO - திரவ வடிவம்

**உட்பொருள்கள்:** ஜிப்ரலின், பல்விக், ஹியூமிக் அமிலங்கள், தாவர ஊட்டச்சத்துகள், கடற்பாசிகளின் சாறுகள், 18 வகை அமினோ அமிலங்கள், நுண்ணூட்டச்சத்துகள் அடங்கியது.

**பலன்கள்:** புதிய செல்களை உற்பத்தி செய்து செல்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதோடு, விரைவில் பூக்களையும் பூக்கத்தூண்டும். மேலும், அதிக பூக்களின் உற்பத்திக்கும், பூத்த பூக்கள் உதிராமலும் மொட்டுக்களை அதிகரிக்கவும் செய்யவும் தூண்டுகிறது..

### MAGIC GOLD: குருணை வடிவம்

**உட்பொருள்கள்:** தழை, மணி சாம்பல் சத்துகள், இரண்டாம் நிலை சத்துகள், நுண்ணூட்டச்சத்துகள், ஆர்கானிக் கார்பன், அமினோ அமிலங்கள், பொட்டாஷ் மற்றும் கடல்வாழ்தாவரங்களின் சாறுகள்.

**பலன்கள்:** செடிகள் ஆரோக்கியமாக நன்கு செழித்து வளரவும் உதவுகிறது. தரம், நிறம், சுவையுடன்கூடிய அதிக மகசூலுக்கும் உதவுகிறது. அதோடு மட்டுமல்லாது இது, பூச்சி/நோய் எதிர்ப்புசக்திகளையும் கொண்டது.

### RICH SOIL மற்றும் FLOWER MIX பவுடர் வடிவம்

**உட்பொருள்கள்:** தழை, மணி, சாம்பல்சத்துகள், நுண்ணூட்டசத்துகள், அமினோ அமிலங்கள், ஹார்மோன்கள், என்சைம்களை உள்ளடக்கியது.

**பலன்கள்:** வேர்களை நன்கு வளர செய்து சத்துகளை செடிக்கு எடுத்துக்கொடுக்க செய்கிறது. தண்டு, கிளைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அதிக பூக்களை உருவாக்க உதவுகிறது.

### டிரிபிள் ஆக்சன் ப்ரோ - (TRIPLE ACTION PRO)

இது வேம்பு, புங்கன், ஆமணக்கு மற்றும் இயற்கைத்தாவரங்களின் சாறுகளினால் தயாரிக்கப்பட்ட திரவ வடிவிலான மூலிகைப் பூச்சி விரட்டியாகும். சிலந்திகள், சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தி பூச்சுகள் செடியை தாங்கும்முன் கட்டுப்படுத்துகிறது.

### மாத்திரை வடிவம் - FUTUGEN

**உட்பொருள்கள்:** அமினோ அமிலங்கள், பயோ பொட்டாஷ், இயற்கை வளர்ச்சி ஹார்மோன்கள், விட்டமின்கள், புரதங்கள், கடற்பாசி பாலிசாக்கரைடுகள், ஹியூமிக், பல்விக் அமிலங்களை உள்ளடக்கி மாத்திரை வடிவில் தயாரிக்கப்பட்ட இயற்கை உரம்.

**பலன்கள்:** மண்ணில் நுண்ணுயிரிகள் பெருகுவதற்கும், நன்மை செய்யும் பாக்டீரியாக்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. செடிகளின் வளர்ச்சியைத் தூண்டி கிளைகளின் எண்ணிக்கையையும் பூக்களின் உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்கிறது.



சத்யம் பயோ, அக்வாபோனிக்ஸ் (Aquaponics), ஹைட்ரோ போனிக்ஸ் (Hydroponics), பசுமைக்குடில் (Poly/ Green house farming), வீட்டுத்தோட்டம் (House Garden), மாடித்தோட்டம் (Terrace Garden) போன்றவற்றிற்கான உரங்கள் தயாரிப்பதோடு, தற்போது அவ்வமைப்பினை தங்களுக்கு தேவைப்படும் அளவில் உருவாக்கித்தருகிறார்கள்.



## வீடுதோறும் விவசாயம்...

# சத்யம் பயோவின் மாடித்தோட்டம்!

மக்கள் மார்க்கெட்டில் வாங்குகின்ற பழங்கள், காய்கறிகள், கீரைகளில் வீரிய உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்தியிருப்பார்கள் என்ற அச்சத்துடன் இருக்கிறார்கள். மேலும், வாங்குவதற்கும் தயக்கம் காட்டி வருகிறார்கள். இதனால் நம் உடலுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை சத்துகள் கூடபெற இயலாமல், பல்வேறு வகையான நோய்களுக்கும் ஆளாகிவருகிறோம்.

இதைத் தவிர்க்க வேலைக்கு செல்வோரும் வீட்டில் இருப்போரும் நம்முடைய வீட்டிலேயே சிறுவீட்டுத்தோட்டம் மற்றும் மாடித்தோட்டத்தில் ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் பயன்படுத்தாமல் இயற்கை முறையில் நமது அன்றாட தேவைக்கான சத்தான காய்கறிகள், பழங்கள், கீரை வகைகளை பயிரிட்டு பலன்பெறலாம் என நினைத்தாலும், பராமரிப்பு, உரங்கள் எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரியாமல் அதைத் தவிர்த்து வருகின்றனர். அதற்கெல்லாம் சிறப்பான தீர்வை வழங்கி வருகிறது மதுரை சத்யம் பயோவின் கிச்சன் கார்டன்.

சத்யம் பயோ இயற்கை உர உற்பத்தி நிறுவனம், வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்பங்களையும், நானோ டெக்கானலஜி போன்ற உயரிய தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி நர்சரிகள், வீடு, மாடித்தோட்டங்கள் நாற்றுப்பண்ணைகளுக்கு ஏற்ற இயற்கை உரங்களை எளிதாக பயன்படுத்தும் வண்ணம், பூச்சிவிரட்டி, திரவ, மாத்திரை, குருணை, ஜெல் வடிவில் தயாரித்து வழங்குகிறது.

இதன்மூலம் நஞ்சற்ற காய்கறிகள் மற்றும் பழங்களை நாமே விளைவித்து பயன்படுத்துவதன் மூலம் நமது பொருளாதாரத்தின் பெரும்பகுதி சேமிக்கப்படுவதுடன், ஆரோக்கியம் மேம்பட்டு ஆயுளும் அதிகரிக்கும்.

சத்யம் பயோ இயற்கை உரங்கள் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கிறது. பயிர்களைத் தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தி, செடிகள் நன்கு வளர உதவுகிறது. எனவே, பயிர்களுக்கு சத்யம் உரங்களால் உயிரூட்டுவோம், வளரும் தலைமுறையை நோயற்ற தலைமுறையாக உருவாக்குவோம்!!!



# விவசாயிகளின் பார்வையில் சத்யம் பயோ!



## மாணிக்கம்

**த/பெ சேகர், பெருமாள்பட்டி சத்திரப்பட்டி**

பட்டப்படிப்பு முடித்தவுடன் தந்தைக்கு உதவியாக விவசாயத்திற்கு வந்துள்ளேன். எலுமிச்சை, மல்லி, செண்டு பூக்கள் ஊடுபயிராக கத்தரி, தக்காளி விவசாயம் செய்துள்ளோம். ஏழு வருடங்களாக சத்யம் பயோ இயற்கை உரம் பயன்படுத்திவருகிறோம். ரசாயன உரத்தை விட செலவு கம்மி, டிரிபிள் ஆக்சன் புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது, சம்பூர்ணா அதிக அரும்புகள் உருவாக்க பயன்படுகிறது



## மகாராஜன்

**66 மேட்டுப்பட்டி கிராமம்**

5 ஏக்கரில் கொய்யாவும், ஊடுபயிராக கத்தரி, தக்காளி விளைவித்துள்ளேன். 4 வருடங்களுக்கு முன்பிருந்து சத்யத்தின் தயாரிப்புகளான கோல்டுஜெல், சம்பூர்ணா மற்றும் தேவைப்படும் உரங்களை வாங்கி பயன்படுத்துகிறேன். அதனால் மண்வளம் மற்றும் மகசூல் அதிகரிப்பதோடு, பூக்கள் உதிராமால், காய்கள் நல்ல பளபளப்பாக, திரட்சியாக நல்ல சுவையாக கிடைக்கிறது.



## பு. தமிழ் செல்வி

**க/பெ. புகழேந்திரன், ந.கொண்டையம்பாளையம், அத்தாணியைச் சேர்ந்தவர்**

சுமார் 6 ஏக்கரில் செவ்வாழை விளைவித்துள்ளார். ஐந்து வருடங்களுக்கும் மேலாக சத்யம் இயற்கை உரங்களான பனானா ப்ளஸ், வேம், விரிடி, கோல்டு ஜெல், சர்கா ஜெல் மற்றும் தயா நியூட்டரியினை எந்தெந்த பருவங்களில் எவ்வளவு தேவை என்பதை ஆலோசித்து அளித்து வருகிறேன். அதனால் ஒரு ஏக்கருக்கு ஒரு வருடம் முழுமைக்குமான மொத்தசெலவு ரூ.20,000 மட்டுமே ஆகிறது.



## அய்யன்குளம் ஜெகந்நாதன்

**தென்னை, நெல்லி விவசாயம் செய்து வருகிறேன்.**

ஏழு வருடங்களுக்கு முன்பாக சத்யம் உரம் அறிமுகமான பிறகு, தற்போது கெமிக்கல் உரம் பக்கமே போறதில்லை! சத்யம் பயோ உரத்தோடு, வேப்பம்புண்ணாக்கு மட்டுமே பயன்படுத்திவருகிறேன். கெமிக்கல் உரத்தோடு ஒப்பிடுகையில் சத்யம் இயற்கை உரங்களின் விலை ரொம்பவும் குறைவு, மகசூலம் திருப்திகரமான அளவிலேயே உள்ளது.



## ராதாகிருஷ்ணன்

**கோவை மாவட்டம், ஆனைமலை தாலுகா, சின்னப்பமலை கிராமம்.**

எங்களுக்கு 500 தென்னை மரங்களுள்ளன. இப்போதெல்லாம் ரசாயன உரம் வைப்பதில்லை, கடந்த நான்கு வருடங்களாக சத்யம் பயோவின் ஆலோசனையின் பேரில் 3, 6 மாதங்களுக்கு ஒரு முறை அமோகா, ஜெல் மருந்துகள் எந்தெந்த பருவத்திற்கு எப்படி அளிக்க வேண்டுமென்பதை கூறுவார்கள், அதற்கேற்ப பராமரிப்பதால் மேல்குரும்பைகள் நன்றாக பிடிக்கிறது, வெயில்காலத்திலும் உதிர்வதில்லை, 40 நாள்களுக்கு ஒரு முறை 2 வண்டிகள் விழுந்த காய்கள் தற்போது 4 வண்டிகள் கிடைக்கின்றன.



## ஐ.ஜேசுராஜ்

**திண்டுக்கல் மாவட்டம், காமலாபுரம்.**

திராட்சை விவசாயத்தில் மூன்று வருடங்களாக கவாத்து வெட்டியதற்குப் பின்பாக சத்யம் 10வது மற்றும் 60வது நாட்களில் கோல்டு ஜெல்லும் அளிப்பதால் காய்களின் எடை, நிறம் அதிகரிக்கிறது. அட்சயா, சம்பூர்ணா டானிக் கொடுப்பதால் வளர்ப்புத்தன்மை அதிகரித்து, கொடியேற்றம் விரைவாகி மகசூல் அதிகமாக கிடைப்பதோடு எவ்வித பூச்சத்தாக்குதலும் ஏற்படுவதில்லை!



## செல்வம்

**தேனி மாவட்டம், சொக்கனூர் கோவில்பட்டி.**

முன்பு ரசாயனம் பயன்படுத்தி பல்வகையான தோட்டக்காய்கறிகளை தரை வெள்ளாமையாக விளைவித்தபோது திருப்தி, மற்றும் வருவாய் போதிய அளவில் கிடைக்கவில்லை. சத்யத்தின் இயற்கை மருந்துகளான எர்த் பவர், சாயில் கோல்டு, டிரிபிள் ஆக்சன் மற்றும் சம்பூர்ணாவைப் பயன்படுத்தி பந்தல் வெள்ளாமையில் செய்துவரும் கோவைக்காய் விவசாயத்தின் மூலமாக மனநிறைவடைவதுடன், வருவாயும் திருப்தியாகக் கிடைக்கிறது.



## பால்சாமி

**தேனி மாவட்டம், பெருமாள் கோவில்பட்டி.**

முன்பு ரசாயன உரங்கள் பயன்படுத்தி மல்லிகை விளைவித்தபோது, வரவுக்கும் செலவுக்குமே சரியா இருந்துச்சு. சத்யம் பயோவோட இயற்கை உரங்களான சாயில் கோல்டு, பிளாக் கார்பன் அல்லது எர்த்பவர், சம்பூர்ணா, அமோகா, சாயில்லிட்டோ, டிரிபிள்ஆக்சன், சம்பூர்ணா, அட்சயா அல்லது ஜீபூம்பா, சூடோமோனாஸ், தயாநியூட்ரி தேவைக்கேற்ப கொடுத்தேன். அதற்குப்பின்னர் நிறைய பூக்கள் பூத்து, தினம்தோறும் நல்ல மகசூலுடன், நிறைவான வருமானமும் கிடைக்குது.



## என்.குருமூர்த்தி

**சித்துமல்லி, திருவாரூர் மாவட்டம்.**

எங்கள் பகுதியில் மூன்று போகமும் நெல் விதைப்போம்.. முன்பு ரசாயனம் பயன்படுத்தியபோது, புழு, பூச்சி, நோய்களால செடிகள் பாதிச்சு மகசூல் குறைந்த அளவே கிடைத்தன. சத்யம் பயோ அறிமுகமான பின்புதான் இதற்கொரு விடிவு கிடைத்தது. தொடர்பு கொண்ட இரண்டு மணி நேரத்தில் எல்லாவற்றையும் பரிசோதனை செய்து, மருந்து கொடுத்து, அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று சொல்லிவிடுவார்கள். அஸ்கோகிங், பிளாக் கார்பன் மருந்துகளை பயன்படுத்திய பின்னர் மகசூல் அதிரித்துள்ளது.



## முனியசாமி

**மேனேஜர், A.S.நர்சரி, பண்டிகோவில் - சென்னை.**

மாடித்தோட்டத்துக்கு தேவையான அனைத்து உரங்களும் கொடுத்துட்டு இருக்காங்க, குருணை வடிவில், மாத்திரை வடிவில், ஜெல் வடிவில், பவுடர் வடிவில் மற்றும் தண்ணீர் வடிவில்-னு மக்கள் எளிமையான முறையில் பயன்படுத்துற மாதிரி உரங்களை கொடுக்குறாங்க. இதுல மேஜிக் கோல்ட்-னு குருணை வடிவிலான உரங்களை மக்கள் வாங்கி பயன்படுத்தி ரிசல்ட் நல்லா வந்ததுனால விரும்பி திரும்ப கேட்டுட்டு வாங்கிட்டு போறாங்க. இது தூர சுத்தி போடுவதன் மூலம் தாவரத்தின் வளர்ச்சியை எடுத்து கொடுக்க உதவுது.



## முத்துக்குமார்

**தேனி மாவட்டம், ஆசாரிப்பட்டி.**

மிளகாய் விவசாயத்தில், இயற்கை தயாரிக்கப்பட்ட கோல்டு ஜெல், பிளாக் கார்பன், சர்க்கா ஜெல்லி, பிளாக் கார்கனுடன், காய்கள் பறிக்கும் காலங்களில் நுண்ணூட்டமாக தயா நியூட்ரின், பயோ பொட்டாஷ் என மாற்றி மாற்றி கொடுத்துவருவதன் மூலமாக தற்போது இரண்டு மடங்கு வரை மகசூல் அதிகரித்துள்ளது.







வேளாண்
மருத்துவ மையம்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம்
அக்ரோ கிளினிக்
விவசாயத்திற்கான முழுமையான தீர்வு
விவசாயத்திற்கு தேவையான
அனைத்தும் ஒரே இடத்தில்
விதை முதல் விற்பனை வரை
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM AGRO CLINIC
எங்களின்
தனித்துவமான
தீர்வு உங்களுக்கு
அதிக மகசூலை
பெற்றுதரும் !
வருட சந்தா
ரூ.3,000/-
Sathyam
Agri
Doctor
Ultimate Solution for Agriculture
SATHYAM AGRO CLINIC
SEED TO SALE
விவசாய ஆலோசனைக்கு அழைக்கவும் :
+91 75508 75508
www.sathyamagroclinic.com